Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 149/2024 PW-1**

Name : அமலதாஸ்
Father / Husband name : குப்பன்
Village : கூச்சிக்கொளத்தூர்
Age : 59
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.02.2026

Accued present. Both side counsel present.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி ஆரோக்கியடென்னிஸ் எனக்கு என்ன உறவு என்றால் மாமா முறை. ஆரோக்கியராஜ் மகன் அருள் எனக்கு என்ன உறவு என்றால் மச்சான் முறை. எனக்கு 59 வயது, இறந்த எனது தந்தைக்கு 80 வயதுக்கு மேல் இருக்கும் என்றால் சரியல்ல, விபத்து சமயத்தில் 75 வயது. ரோட்டைக்கடக்கும்போது தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல, கடந்து வந்தபிறகு விபத்து நடந்தது. நான் சம்பவ சமயத்தில் சென்னையில் வேலை செய்தேன் என்றால் சரிதான். புகாரை யார் எழுதியது என்றால் நான் எழுதச்சொன்னேன். நான் கொடுத்த புகாரில் அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் எனது அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அசா.2, அ.சா.3 விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், போன் மூலம் தகவல் வந்தது. இழப்பீடு வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால்

செய்துள்ளேன். விபத்தை நான் நேரில் பார்க்காததால் விபத்தை பற்றி என்னால் சொல்லயியலாது என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 149/2024 PW-2**

Name : ஆரோக்கியடென்னிஸ்
Father / Husband name : மரியஜோசப்
Village : கூச்சிக்கொளத்தூர்
Age : 35
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.02.2026

Accued present. Both side counsel present.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 எனக்கு என்ன உறவு என்றால் மாமா முறை. அ.சா.3 அருள் என்ன உறவு என்றால் சித்தப்பா முறை. விபத்தில் இறந்தவருக்கு 80 வயது இருக்கும் என்றால் சரியல்ல, சுமார் 68, 70 வயது இருக்கும். மேற்கிலிருந்து கிழக்காக ரோட்டைக்கடக்கும்போது விபத்து நடந்தது என்றால் சரியல்ல, ரோட்டை கடந்து பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது விபத்து நடந்தது. பொதுவாக 75 வயதானவர்களுக்கு காது, கண் குறைபாடு இருக்கும் என்றால் சரிதான், இறந்த நபருக்கு அவ்வளவு வயது இல்லை. பொதுவாக வயதானவர்கள் சாலையை கடக்கும்போது பார்த்தால் அங்குள்ளவர்கள் உதவி செய்வார்கள் என்றால் சரிதான், இறந்தவர் நல்ல நிலையில் நடந்துகொண்டிருந்தார். விபத்தில் இறந்த நபர் எனக்கு தாத்தா என்றால் சரிதான். இறந்தநபருக்கு சாலையை கடக்க நான் உதவி செய்யவில்லை என்றால் சரிதான், அவராகவே ரோட்டை கடந்து வந்துவிட்டார். போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 29.06.2023.

2. போலிசார் விசாரணையில் நானும் அ.சா.3 திண்டிவனம் செல்லும்போது விபத்து நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் டீக்குடிக்க சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அன்றையதினம் நான் சம்பவத்தை பார்க்கவில்லை, அதனால் தான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்தயிடத்திற்கு அருகில் கடைகள் நிரைய உள்ளது என்றால் சரியல்ல, ஒருடீக்கடை உள்ளது. சம்பவயிடத்தில் எங்கள் இருவரை தவிர வேறு யார் யார் இருந்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் அந்த சமயத்தில் வேறு யாரும் இல்லை. சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் 3 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் சம்பவம் சம்மந்தமாக புகார் மற்றும் தகவல் எதுவும் காவல் நிலையத்திற்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தை நான் பார்க்கவில்லை, உறவினர் என்பதால் பார்த்ததாக பொய்யான சாட்சியம் அளிககிறேன் என்றால் சரியல்ல. இழப்பீடு வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் வழக்கின் எதிரியை பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொன்னேன். முதல் விசாரணையில் வழக்கின் எதிரியை பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொன்னேன். இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது, இந்த விபத்து எதிரியின் கவனக்குறைவால் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 149/2024 PW-3**

Name : அருள்
Father / Husband name : ஜெயராமன்
Village : கூச்சிக்கொளத்தூர்
Age : 46
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.02.2026

Accued present. Both side counsel present.

**<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் இறந்தவர் எனக்கு என்ன உறவு என்றால் ஊர்முறையில் மாமா. அ.சா.2 எனக்கு உறவினர் என்றால் சரிதான். மற்றொரு சாட்சி அருள் எனக்கு உறவினர் என்றால் ஊர்முறையில் உறவு. இழப்பீடு வேண்டி இறந்தவரின் குடும்பத்தார் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் திண்டிவனம் செல்வதற்காக பேருந்து நிறுத்தத்தில் நின்றிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் டீக்கடையில் நின்றிருந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, பேருந்துநிறுத்தமும், டீக்கடையும் பக்கத்து பக்கத்தில் இருக்கும். பொதுவாக வயதானவர்கள் ரோட்டைக்கடக்கும்போது படபடப்பு வரும் என்றால் இறந்த நபர் ரோட்டைக்கடந்து வந்த பிறகு விபத்து நடந்தது. பொதுவாக வயதானவர்கள் ரோட்டைக்கடக்கும்போது அங்குள்ளவர்கள் உதவுவார்கள் என்றால் சரிதான். வழக்கில் இறந்த நபருக்கு ரோட்டை கடக்க உதவினோமா என்றால் அவர் ரோட்டைக்கடந்து வந்துவிட்டார். நான் சம்பவம் சம்மந்தமாக புகார் மற்றும் தகவல் எதுவும் காவல் நிலையத்திற்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான், அ.சா.1 சொல்ல நான் புகாரை எழுதிகொடுத்தேன். புகாரில் சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான், அ.சா.1 சொன்னதை

எழுதிகொடுத்தேன். சம்பயிடத்தில் பேருந்து நிறுத்தம், கடைகள் உள்ளதால் கூட்டமாக இருக்கும் என்றால் சரியல்ல, ஒரே ஒரு கடை தான் உள்ளது. அங்கு பேருந்து நிறுத்தம் உள்ளதால் அதிவேகமாக செல்ல வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு அருகில் முருகன் டீக்கடை, எவரஸ்ட் மசாலா கடை உள்ளது என்றால் மசாலாக்கடை இல்லை. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை, உறவினர் என்பதாலும், இழப்பீடு பெறவேண்டியும் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.